## மனசு

புயலின் நடுவில்
பூக்களைத் தேடினேன்.
சிதறிய பூக்களோ...தெருவெங்கும்.
ஆனால்
மனசு மட்டும் இன்னும் மரத்தின் மேலே.

எது தேவை?
எண்ண முடியவில்லை.
ஆனால்
எண்ணங்கள் மட்டும் எப்பொழுதும் தேவையாய்.

தேக்கி வைக்காத நீரை
தேவை காலத்தில் நினைத்திருந்தேன்.
பத்திரமாய் மனசு மட்டும்
வற்றியுள்ள குளம் போல.

ஆர்ப்பரிக்கும் கடலலைகள்
கரையைத் தழுவுவதால்
சாந்தமடைகின்றன.
எண்ணங்களும் அப்படித்தான்
ஆனால்....
கரையை அவை எட்டுவதே இல்லை.

# <u>பரிமாறப்படாத கவிதைகள்</u>

நங்கூரமிட்ட

கலம் போலல்லாது...

வண்ணத்துப்பூச்சியின்

சிறகுகளாய்....

காகிதக் கோடுகள்

சிறைப்படுத்தாத

சிந்தனை வரிகள்....

எப்போதாவது உணரப்படும்

எல்லோருக்குள்ளும்.

காற்றில் மட்டுமே

கலந்திருக்கிறது....

பரிமாறப்படாத

கவிதைத் தொகுதிகள்...

## விடியலுக்காக ..

காலை விடிந்து விட்டது..

காத்திருப்போர் எல்லாம்..

விழித்திருக்கலாம் இப்போது..

பள்ளிக்கு அனுப்புவதற்காக

பிள்ளைகளை அம்மாக்கள் எழுப்பிக் கொண்டிருக்கலாம்..

கடன் அட்டை இல்லாதோர்..

காசுக்காக யோசிக்க ஆரம்பித்திருக்கலாம்..

வன்முறை பற்றி

வாய் பிளந்து, பத்திரிக்கைகள்

வாசல் முன்னே வீசப்பட்டிருக்களாம்..

கோப்பிக் கடையில்

தே 'ஒ' வோ, தே 'சி' யோ

வாங்கி, குப்புசாமிகள் சிலர்

வேலை இடம் நோக்கி

லாரிக்காக காத்திருக்கலாம்..

காத்திருக்கலாம் சிலபேர்..

இவர்கள் பணம் அனுப்பும் நாளை எண்ணி..

காத்திராத நாட்கள்கூட

மற்றொரு விடியலுக்காக

காத்திருக்கலாம்..

## ஈர்ப்பு விசை

ஒளியின் மூலம்
சூரியன் என்றார்கள்.

எந்த ஈர்ப்பு விசையில்
இந்தப் பிரபஞ்சம்?

கணினியைத் திறந்து
கண்டபடி தேடினேன்.

' என்சைக்ளோபீடியா ' வை
எட்டு முறை திருப்பினேன்

புத்தகங்களின் நடுவே
புதைந்திருந்தேன்..

இப்பொழுதோ...
அறிஞர்களின் உரையை
ஆராய்ந்து கொண்டிருக்கிறேன்...
'அன்பே' உருவான அன்னையின்
அடையாளம் மறந்து...

---

## <u>மழலையர் காப்பகம்</u>

தொலைப்பதும்

மீட்பதும்

அங்கு தினமும் வாடிக்கை...

தூக்கத்தில்

தொலைபவர்களைக் காட்டிலும்,

துக்கத்தில்

தொலைபவர்கள் தொல்லை அதிகம்.

தொலைப்பவர்களின்

வசதிக்கேற்ப

தொலைந்தவர்கள் வசப்படுவர்.

அங்கு மீட்பு என்பது

தொலைந்தவர்களை மறுபடி தொலைப்பதற்கே...

தொலைந்தவர்கள்

ஒரு நாள்

தொலைப்பவர்கள் ஆவர்...

இப்படி.....

தொலைந்தவர்களும்

தொலைப்பவர்களும்

தொலைத்துக் கொண்டிருந்தார்கள்...

## **நம்பிக்கை**

நெடுதுயர்ந்த மரங்களினூடே
சின்னஞ் சிறு பூச்சியாய் நான்...

எனக்கும் தெரியும்
என்னுள் விரியும்
சிறகுகளைக்கொண்டு
உச்சிமரத்தையே
தொட்டுவிட முடியுமென்று.

ஆம்...
காலத்தை வெல்ல முயலுகிறேன்
காலத்தின் துணைகொண்டே....

# <u>ஆடு</u>

ஊரு காக்க வேண்டி,
குலதெய்வத்திற்கு
ஆடுகளை வெட்டி
படையலிட்டான்... ஒருவன்...

ஈகை குணம் வளர
எட்டு ஆடுகளை வெட்டி
எல்லோருக்கும்
பகிர்ந்தளித்தான்... மற்றொருவன்...

பரிசுத்த மனம் காக்க
பத்து ஆடுகளை
பகிர்ந்து உண்டான்... வேறொருவன்...

பக்கத்தில் இருந்த
ஆட்டு மந்தையின்
தலைமை ஆடு
தலையாட்டிக் கூறியது...
"எம்மதமும் எமக்குச்
சம்மதமே" என்று.

---

## <u>மகா பொய்யர்கள்</u>

கையில் வைத்திருந்த

புத்தகத்தை

பின்னால் மறைத்துக் கொண்டு

"புத்தகம் காணாமல் போச்சு"

என்றது குழந்தை.

அப்பா கண்டித்தார்...

"பொய் சொன்னா

பூதம் புடிச்சிட்டு போயிடும்"

என்று.

மகா பொய்யர்கள்...

## பிம்பங்கள்

கீழே விழுந்து

நொறுங்கிக் கிடக்கின்றன

என் முகம்..

சிதறிய முகத்தை

பொறுக்கி

சேர்க்கின்றேன்..

குப்பையில்

போடு என்கிறாள்

என் அம்மா..

வேலைக்காக

மற்றொரு மனுவை

பூர்த்தி செய்து கொண்டிருக்கிறேன்.

---